# மெட்ரோ பயணியருக்கு 'சைக்கிள் சேரிங்' வசதி

**சென்னை, ஆக. 24–**

சென்னை மெட்ரோ நிலையங்களில், பயணியருக்கு, 'சைக்கிள் சேரிங்' வசதி செய்யப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதிப்பை தவிர்க்கும் நோக்கில், 'ஸ்மார்ட் பைக்' என்ற பெயரில், 'சைக்கிள் ஷேரிங்' திட்டம், சென்னையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதை தொடர்ந்து, சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களிலும், இவ்வசதி விரிவுபடுத்தப்பட்டுஉள்ளது.

மெட்ரோ ரயில் பயணியருக்காக, டி.எம்.எஸ்., நேரு பூங்கா, அண்ணாநகர் டவர், அண்ணாநகர் கிழக்கு, திருமங்கலம் மெட்ரோ நிலையங்களில், முதற்கட்டமாக, இவ்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.



சைக்கிள் பயணம் செல்ல விரும்பும் பயணியர், ஆண்ராய்டு மொபைலில், 'ஸ்மார்ட் பைக்' மொபைல் செயலியை பதிவிறக்கம் செய்ய வேண்டும்.

பின், மொபைல் போன் எண்ணை பதிவு செய்து, 'க்யூ ஆர் கோடு' ஸ்கேன் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு சைக்கிளுக்கும் அடையாளமாக, ஐந்து இலக்க எண், சைக்கிளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு மணி நேரத்துக்கு, 5 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

அதன்பின், அடுத்த அரை மணி நேரத்துக்கு, ஒன்பது ரூபாய் வசூலிக்கப்படும். நாள் ஒன்றுக்கு, 49 ரூபாயும், மாதாந்திரம், 249 ரூபாயும், மூன்று மாதத்திற்கு, 699 ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

நிலையத்தில் இருந்து, சைக்கிள் எடுத்துச் செல்வோர், நகரில் மற்ற இடங்களில் உள்ள, 'சைக்கிள் சேரிங்' நிறுத்தங்களிலும் விட்டு செல்லலாம்.

அனைத்து சைக்கிள்களிலும், ஜி.பி.எஸ்., கருவி பொருத்தப்பட்டுள்ளதால், சைக்கிள் இருப்பிட விபரங்கள், நிறுவனத்தின் கண்காணிப்பில் இருக்கும். காலை, 8:00 மணி முதல், இரவு, 8:00 மணி வரை, சைக்கிள் கிடைக்கும்.